# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2010
ஐப்பசி 4
ஜுல்ஹ 28
ஞாயிறு (21-10-1979)
நிறுவியது 1947
புத்தகம் 33
இதழ் 40
விலை சதம் 75


# மலையகத் தமிழ்த் தொழிலாளிகளை வெளியேற்றுவதற்கு திட்டம்!

## வவுனியாவில் 42,000 ஏக்கர் நிலம் பறிமுதல் காணியமைச்சர் உத்தரவு; 'ரிவிரஸ' தகவல்!

வவுனியா மாவட்டத்தில் உள்ள அரசாங்கக் காணிகளில் குடியேறியிருந்த மக்களை அங்கிருந்து வெளியேற்ற யூ. என். பி. அரசாங்கம் முடிவு செய்துள்ளது. சுமார் 42,000 ஏக்கர் நிலங்களில் வசித்து வந்த மலையக தமிழ் மக்களை அங்கிருந்து வெளியேற்றிவிட்டு, ''நிலம் பெற தகுதியானவர்களுக்கு'' அவற்றை பகிர்ந்து கொடுக்குமாறு காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசநாயக்கா உத்தரவிட்டுள்ளதாக 'ரிவிரச' குறிப்பிட்டுள்ளது.


''42,000 ஏக்கர்களில் இருந்து நாடற்றவர்களை விரட்டு'' என்ற தலைப்பில் 'ரிவிரச' (20—9—79) இச் செய்தியை பெருமிதத்துடன் வெளியிட்டிருந்தது.

'உத்தரவின்றி காணிகளை கைப்பற்றுவது அதிகரிக்கின்றது' என்ற தலைப்பில் கடந்த 18ம் திகதி 'தவச' பத்திரிகை வெளியிட்ட இனவாதச் செய்திக்கு அரசின் நடவடிக்கை மூலம் பலன் கிடைத்துள்ளது. இதையும் ஞாயிறு 'ரிவிரச' சுட்டிக்காட்டத் தவறவில்லை.

## வாழ்த்துகிறோம்

தமிழீழத் தேசியத் தந்தை மூதறிஞர் அமரர் செல்வநாயகம் அவர்களின் மூன்றாவது புதல்வர் செல்வன். இரவீந்திரனுக்கும், எஸ்.சி. ஜேசுதாசன் தம்பதிகளின் செல்வக்குமாரி சாவித்திரிக்கும் லண்டன் நகரிலுள்ள பற்னி மெதடிஸ்தேவாலயத்தில் திருமதி சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்களின் முன்னிலையில் 1-10-79 திங்கட்கிழமை காலை திருமணம் நடைபெற்றது. மணமக்கள் சீருடனும் சிறப்புடனும் வாழ சுதந்திரன் வாசகர்களின் சார்பில் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்




கல்குடாத் தொகுதியிலுள்ள களனியாமடு, ஆண்டான் குளம் ஆகிய கிராமங்களை காட்டும் படம் இது; கட்டுரை உள்ளே.

## தீபாவளி வாழ்த்துக்கள்

அடக்குமுறையையும், அடிமைத்தனமும், கொடுமையும் கொடுங்கோலும் அழிந்தொழிந்த தீபாவளி நன்னாளில் தமிழ் மக்கள் அனைவர்க்கும் எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். சுதந்திர ஒளி எங்கும் பரவுக; அடிமை இருள் மறைக! -ஆர்



வெனிசுலா. கரகாசில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச பாராளுமன்ற மாநாட்டின் ஆரம்பதினத்தன்று—வெனிசுலா தேசத்து ஜனாதிபதியும் அவரது பாரியாரும் — சர்வதேச பாராளுமன்ற செயல்கமிட்டி உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவரும் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு. வீ. என். நவரத்தினம் அவர்கள் அறிமுகம் செய்துவைக்கப்படும்போது எடுக்கப்பட்ட படம். நவரத்தினத்திற்கு அருகில் கண்ணாடியுடன் காணப்படுபவர் இலங்கைப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் திரு. சாம் விஜயசிங்காவாகும்.


'அன்பின் தொனி'
உலகப்புகழ் பெற்ற பாடகரும் பிரசங்கியுமான
Dr. சாம் கமலேசன்
நடத்தும்
சுவிசேஷக் கூட்டங்கள்
ஒக்ரோபர் 29.ம், 30-ம் திகதிகளில்
வீரசிங்கம் மண்டபத்தில்
தினமும் மாலை 5-30 மணி முதல்
வானொலியில் கேட்டுச் சுவைத்த நற்செய்திப் பணியாளரை நேரில் கண்டு, கேட்பதற்கு அரியவாய்ப்பு! தவறவிடாதீர்கள்!!
கிறீஸ்துவுக்காக இளைஞர் சங்கம் (YFC) அளிப்பது!
உதவி: இலங்கை இல்லந்தோறும் நற்செயதி சத்திய வசனம்



தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# "எனக்குக் கிடைத்த வெற்றி சாவகச்சேரி தொகுதி மக்களின் வெற்றி!"

## வி. என். நவரத்தினம் பா. உ. பெருமிதம்!

"கடந்த காலங்களில் எமது பிரச்சினைகளை உலக அரங்கில் எடுத்துக் கூற முடிந்ததே தவிர எமக்கு இப்போதுதான் அதை நிலைநிறுத்தும் சக்தியும் அதிகாரமும் கிடைத்திருக்கிறது. இதைப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் பிரச்சினைக்கு சர்வ தேச நாடுகளின் ஆதரவைத் திரட்டுவேன், இதற்காக எனது முழு சக்தியையும் பயன்படுத்துவேன்"

இவ்வாறு சர்வதேசபாராளுமன்ற ஒன்றியத்தின் நிர்வாகக் குழுத்தேர்தலில் வெற்றியீட்டியபின் தமது தொகுதிக்கு திரும்பிய சாவகச்சேரி பா,உ. திரு.வி.என். நவரத்தினம், தமது ஆதரவாளர்கள் மத்தியில் பேசும்போது குறிப்பிட்டார்.

திரு. நவரத்தினத்துக்கு சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு.எஸ். கே. திரவிய நாயகம் பட்டாடை போர்த்தி வரவேற்றார்.

திரு, நவரத்தினம் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது.—

"சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தில் தென் கிழக்குஆசியா தூரகிழக்கு ஆசியா நியூசிலாந்து அவுஸ்திரியா ஆகிய நாடுகளின் ஏகப்பிரதிநிதியாக நான் தெரிவு செய்யப்பட்டிருக்கிறேன்.

எனக்குஆதரவாக99 வாக்குகளும் என்னை எதிர்த்துப் போட்டியிட்ட இந்தியருக்கு 44வாக்குகளும் வங்காள தேசத்தவருக்கு 14 வாக்குகளுமே கிடைத்தன;

"அமெரிக்கா ரஷ்யா ஆகிய நாடுகளின் அங்கத்துவப்பட்டியலில் எனது பெயர் மட்டுமே இடம் பெற்றிருந்தது. இஸ்ரேல் எகிப்து வியட்நாம் தென் ஆபிரிக்க நாடுகள் ஒன்று சேர்ந்து எனக்கு ஆதரவு அளித்தன,

"நான்கு ஆண்டுகள் தொடர்ந்து இப்பதவியை வகிப்பேன், முதலாவது செயற்குழுக்கூட்டத்தில் சர்வதேச அரங்கிலுள்ள 40 பிரச்சினைகள் ஆராயப்படும் இதில் பாலஸ்தீன விடுதலைப் பிரச்சினை முதல் இடம் பெறும். அடுத்து மூன்று முக்கிய பிரச்சினைகளைத் தெரிவு செய்யும் அதிகாரம் செயற்குழுவுக்கு விடப்பட்டுள்ளது, அந்த மூன்று விடயங்களுக்குள் ஒன்ருக தமிழீழ விடுதலைப் பிரச்சினையை இடம்பெறச் செய்ய முயற்சிப்பேன்.

"இது எனக்குத் கிடைத்த வெற்றியல்ல என்னைப்பிரதிநிதியாகத் தெரிவு செய்து அனுப்பிய சாவகச்சேரி தொகுதி மக்களுக்குக் கிடைத்த வெற்றியாகும்"

—இவ்வாறு நவரத்தினம் கூறினர்.


சுடர் CHUDAR

பல்சுவை அம்சங்களுடன் வெளிவந்துவிட்டது ஐப்பசி இதழில்

இவ்விதழில்

புதுயுகம் பிறக்கிறது
காவலூர் எஸ். ஜெகநாதன்
(சிறுகதை)

சாய்ந்த கோபுரங்கள் நிமிர்கின்றன
—அன்ரனி மனோகரன்
(இம்மாத பரிசுக்கதை)

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர்களின் பேட்டி

கவியின் இரு கண்கள்
—கனக. பரமேஸ்வரன்
(இலக்கியக்கட்டுரை)

உணர்ச்சிக் கவிஞரின் ஆக்கங்கள்
—ச. ஸ்ரீ காந்தா
(ஒரு நோக்கு)

வீணையில் எழும் ராகங்கள்
— தமிழ்ப் பிரியா
(குறுநாவல்)

மற்றும் பல கவிதைகள். கட்டுரைகள். துணுக்குகள், விஞ்ஞானத் தகவல்கள் போன்ற பல சுவையான ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
நிர்வாகி
சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட்
194ஏ,பண்டாரநாயக்கவீதி
கொழும்பு-12





சு. இராமசாமி,
யாழ்ப்பாணம்

கே: குறுக்குவழியில் திடீரெனப் பணக்காரனுவதற்கு ஒரு வழி கூறுங்கள்!

ப: தமிழ்ப்பிரதேசத்தில் ஏதாவதொரு தொகுதிக்கு யூ.என்.பி. அமைப்பாளராக மாறுங்கள்!

கே;. அடுத்த தேர்தலில் யூ,என்.பி. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெறும்நோக்குடன் இப்போதிருந்தே விளம்பரம் தேடுவோரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: விளம்பரத்தாலே உயர்ந்தவன் வாழ்க்கைநிரந்தரமாகாது, முன்னுள் மந்திரி குமாரசூரியர் தன்னைப் பற்றிச் செய்யாத விளம்பரமா? 1977ஆடிப்பொதுத் தேர்தலில் அவருக்கு நேர்ந்தகதிதான்அடுத்தபொதுத் தேர்தலில் இவர்களுக்கும்!

* * *

இ, உருத்திர மூர்த்தி
வவுனியா,

கே: தார்மீக ஆட்சியில் விசாரணையின்றி எவரும் தடுப்புக்காவலில் வைக்கப் பட மாட்டார்கள் என்று ஜனுதிபதி கூறியிருக்கிருரே?

ப: அது உண்மையானுல் தமிழீழ விடுதலைப் புலிகள் தடைச்சட்டம்பயங்கரவாத தடைச்சட்டம்அவசரகாலச் சட்டம்ஆகியசட்டங்களுக்கு அவசியமென்ன?

கே: எங்கே அமைச்சர் சிறில்மத்தியூவின் பேச்சு மூச்சையே,காணுமே!

ப, அவர் பேச வேண்டிய அவசியமின்றி அவரது ஆசைகள் ஒவ்வொன்ருக இப்போது நிறைவேறி வருகின்றனவே!

சு- பாலகிருஷ்ணன்,
வத்தளை.

கே: தமிழ் அரசனுன இராவணன் இலங்கையை எத்தனை ஆயிரம் ஆண்டுகட்கு முன் ஆண்டான்என்பதைக் கூறுவீர்களா?

ப, குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றுக்கும் இடைப்பட்ட நிலம் பெருவளநாடு என்றும் பஃறுளிக்கும் தென் கடலுக்கும் இடைப்பட்ட நிலம் தென்பாலி நாடு எனவும் வழங்கின: கி,மு.31 திருவள்ளுவர் ஆண்டாகும், தி,மு, 3000 ஆண்டுகளுக்கு முன் தென்கடல் பொங்கித் தென்பாலியையும் கிழக்கு நாட்டின் பெரும் பகுதியையும்வாய்க் கொண்டது. பின் தி.மு, 2500ல் ஒரு முறை கடல் பொங்கிப் பெருவளத்தின் பெரும் பகுதியையும் கிழக்கு நாட்டையும் விழுங்கிற்று பின் தி.மு, 700இல் ஒருமுறை கடல் பெருகித் திராவிடத்தின் ஒருபகுதியையும் உண்டேப்பமிட்டது. இரண்டாம் கடல் கோளின் பின்னர் இலங்கை உண்டானது. இலங்கை நாட்டின் நடுவில் இருந்த முக்கடல் மலைமீது இலங்கை நகர் இருந்தது. மூன்றும் கடல் கோளுக்கு முன் இலங்கையிலிருந்து தமிழகத்தைஆண்டு வந்த தமிழர் தலைவனே இராவணன் என்கிருர் புலவர் குழந்தை தமது இராவண காவியத்தில்,

* * *

ச. முருகையா,
கொழும்பு-6.

கே: கடைசித் தமிழ் மன்னனுன சங்கிலி மன்னனின் கோட்டை பாதுகாக்கப்படுமா?

ப: கட்டபொம்மனின் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைப்புதுப்பித்துக்கட்டி நினைவுச் சின்னமாக்கினர் தமிழகத்தில் கலைஞர் கருணநிதி, இங்கு சங்கிலி மன்னனின் கோட்டையைப் புதுப்பிப்பதற்கும், நினைவுச் சின்னம் அமைப்பதற்கும் நம்மிடம் ஆட்சி அதிகாரம் இல்லை. சங்கிலியனுக முன்பு வேடம் போட்ட அமைச்சரால் ஏதாவது செய்ய முடிகிறதா இது விடயத்தில் என்று பார்ப்போம்.

* * *

க. சந்தசாமி,
உசன்,

கே: இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரான திரு. வி. என். நவரத்தினம் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் ஆசியப் பிராந்தியப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டது குறித்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் மூச்சுக்கூட விடவில்லையே, காரணம் என்ன?

ப: எதிர்க்கட்சியையும் மதிக்கும் ஜனநாயகப் பண்பாடு ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் அவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது! பேசுவது தர்மம்-செயலோ அதர்மம் — இதுதான் யூ. என். பி. யின் தார்மீகம்!

★ கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி - அனுப்ப வேண்டும்.

திருவாளர் குயுக்தியார்

15, மகாத்மாகாந்தி வீதி,
யாழ்ப்பாணம்.

# கைதடி ஆயுர்வேத மருத்துவமனையில் எழுபது வீதம் சிங்கள ஊழியர்

## மொழிபுரியாது நோயாளிகள் அவதி!

கைதடியிலுள்ள ஆயுர்வேதவைத்திய சாலையில் நூற்றுக்குஎழுபது வீத ஊழியர்கள் வெளியூர் சிங்களவர்களாகவே நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தமிழ்மொழிதெரியாத காரணத்திஞல், வைத்திய சாலைக்கு செல்லும் நோயாளிகள் பெரும் அவதியுற நேரிட்டிருக்கிறது.

கைதடி ஆயுர்வேத வைத்திய சாலைக்கு தென் மாவட்டங்களைச் சேர்ந்த சிங்கள ஊழியர்களே பெருவாரியாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு சிங்களத்தைத்தவிர வேறு எந்த மொழியும் புரிவதில்லையாம். இதனுல் அங்கு செல்லும் பெருவாரியான தமிழ் மட்டுமே தெரிந்த நோயாளிகள் பெரும் இன்னல்களுக்கும் தொல்லைகளுக்கும் ஆளாகிருர்கள். தானறியா சிங்களம் தன்பிடரிக்கு சேதம் என்பதுபோல, மொழி புரியாத காரணத்தால் பெரும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர்.

இது இப்படியிருக்க யாழ் மாவட்டத்தில் பல்லாயிரக் கணக்கானேர் வேலையற்றிருக்க, வெளிமாவட்டங்களை சேர்ந்தவர்களை இங்கு திணித்துள்ள அரசின் செயலும் வேலையற்ற இளைஞரிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இவை சம்பந்தமாக சாவகச்சேரி பா. உ.,திரு. நவரத்தினத்துக்கும் புகார் செய்யப்பட்டுள்ளது.

# 50 ஆண்டுகளாக இலங்கையில் அரசியல்சீர்திருத்தம்படும்பாடு!

அதிகார, நிர்வாகப் பரவல் சம்பந்தமாக ஜனாதிபதி ஆணைக்குழு குறித்து திரு. நடேசன் சத்தியேந்திரா 13.10.79 ட்றிபியூன் இதழில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அக்கட்டுரையில் 1928-ம் ஆண்டிலிருந்து இப்பிரச்சினை எந்தெந்த வடிவமெடுத்து வந்துள்ள தென்பதை விளக்கியுள்ளார். சம்பந்தப்பட்ட பகுதியை சுதந்திரன் வாசகர்களுக்காக இங்கு தமிழில் தருகிறோம்.

1928ம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழு, நிர்வாகத்தைப் பரவலாக்கும் நோக்குடன் மாகாண மன்றங்களை (Provincial councils) உருவாக்க வேண்டுமென்று முதன் முதலாகப் பரிந்துரை செய்தது.

பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து, காலஞ்சென்ற திரு. எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயகாவைத் தலைவராகக்கொண்ட உள்ளூர் நிர்வாக அதிகாரசபை, டொனமூர் ஆணைக்குழுவின் பரிந்துரையை ஆராய்ந்தது; 1940ம் ஆண்டில் சட்ட நிருபண சபை மாகாண சபைகளை நிறுவும் திட்டத்துக்கு அங்கீகாரம் அளித்தது. எனினும் யுத்தம் மூண்டதால், எதுவுமே நடைபெறவில்லை.

1947ம்ஆண்டு சனப்பிரதிநிதிகள் சபையில் காலஞ்சென்ற திரு எஸ். டபிள்யூ, ஆர். டி. பண்டாரநாயகா மாகாணசபைகளை நிறுவுவதற்கு மீண்டும் தனது ஆதரவைத் தெரிவித்தார்.

1955ம் ஆண்டு, கச்சேரி நிர்வாகத்துக்குப் பதிலாக பிரதேச சபைகளை நிறுவ வேண்டுமென சொக்ஸி ஆணைக்குழுபரிந்துரைத்தது. 1957ம் ஆண்டு மே மாதம், திரு. பண்டாரநாயகாவின் அரசாங்கம். உத்தேச பிரதேச சபைகளை நிறுவுவதற்காக ஒருநகல் மசோதாவை சமர்ப்பித்தது.

இதைத் தொடர்ந்து 1957 யூலை மாதம் ஏற்பட்ட பண்டாரநாயகா — செல்வநாயகம் ஒப்பந்தம், பிரதேச சபைகளுக்கு நேரடியாக தேர்தல் நடைபெறவும் பிரதேச சபைகளுக்கு, விவசாயம், கூட்டுறவு, காணி, காணி அபிவிருத்தி, காணிக் குடியேற்றம், கல்வி ஆகிய துறைகளில் அதிகாரம்இருக்கவும் வழிவகுத்தது.

அப்போதைய ஐக்கிய தேசியக்கட்சியும் சிங்கள இனத்தில் ஒரு பிரிவினரும் காட்டிய திட்டமிட்ட எதிர்ப்பின் காரணமாக அந்த உடன்படிக்கை நிலைபெறவில்லை. தன்னை ஆட்சி பீடத்திலமர்த்திய மகாஜன பெரமுனையின் நெருக்குதலுக்கு பண்டாரநாயகா அடிபணிந்தார்.

1963 யூலையில், திருமதி பண்டாரநாயகாவின் அரசாங்கம், கச்சேரி முறைக்குப் பதிலாக மாவட்டசபைகளை நிறுவும் பிரச்சினை குறித்து விரைவான ஆலோசனை'' செலுத்தும் என்று அறிவித்ததுடன் மாவட்ட சபைகள் குறித்து ஆராய ஒரு குழுவையும் நியமித்தது. இக்குழு மாவட்ட சபைகளுக்கான உத்தேச நகல் மசோதாவையும் தயாரித்தது; ஆயினும் எதுவும் நடைபெறவில்லை.

1965-ம் ஆண்டு காலஞ்சென்ற டட்லி சேனநாயகாவின் அரசாங்கம், மாவட்ட சபைகள் நிறுவுவது குறித்து ''உண்மையான ஆலோசனையை'' செலுத்தப்போவதாக அறிவித்தது. 1968ம் ஆண்டு மாவட்டசபை நிறுவும் உத்தேச நகல் மசோதாவை டட்லிசேனநாயகாவின் அரசாங்கம் அங்கீகரித்து, அதை ஒரு வெள்ளை அறிக்கையாக சமர்ப்பித்தது. இவ்வெள்ளையறிக்கையின்படி, உத்தேச மாவட்ட சபைகள், மாவட்டத்திலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள். முனிசிபல் சபை மேயர்கள், உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் ஆகியோரைக் கொண்டிருக்கும் என்று வெள்ளை அறிக்கை கூறியது.

பிரதேச சபைகள் மசோதாவுக்கும் பண்டா-செல்வா ஒப்பந்தத்துக்கும் 1957ம் ஆண்டு என்ன கதிநேர்ந்ததோ அதுவே 1968ம் ஆண்டின் மாவட்டசபை மசோதாவுக்கும் நேர்ந்தது. இம்முறை சிறீலங்கா சுதந்திரக் கட்சியிடமிருந்து இதற்கு எதிர்ப்புக்கிளம்பியது.

அண்மையில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடுத்திருந்த ஒரு அறிக்கையில், தாம் பிரதமராக இருந்திருந்தால் எதிர்ப்புக்கு அஞ்சி, 1968ம் ஆண்டு மாவட்டசபை மசோதாவைகைவிட்டிருக்க மாட்டேன் என்று கூறியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது அதே சமயம் எதிர்க் கட்சியிலிருக்கும் சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஜனாதிபதி ஆணைக்குழுவில் பங்குபெற மறுத்து விட்டதும்எமக்குத் தெரியும்.

1928ஆம் ஆண்டிலிருந்து ஐம்பதுவருடங்கள் ஓடி விட்டன. நாம் மாகாணசபைகளிலிருந்து பிரதேச சபைகளுக்கும், பிரதேச சபைகளிலிருந்து மாவட்ட சபைகளுக்கும் மாறி இப்போது மாவட்ட சபையிலிருந்து அபிவிருத்திச் சபைகளுக்கு சென்று கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது, சிறிமா பண்டாரநாயகாவின் ''விரைவான ஆலோசனை''யையும் — காலஞ்சென்ற டட்லி சேனநாயகாவின்:'உண்மையான ஆலோசனை''யையும் இது சம்பந்தமாக நாம் பார்த்து விட்டோம்- கமிட்டிகளுக்கும்; ஆலோசனைக்குழுக்களுக்கும் பரிந்துரைகளுக்கும் ஒருபோதும் பஞ்சம் இருந்ததில்லை. ஆனால், நியாயமானது சரியானது என்று தாம் நினைப்பதைச் செய்து முடிக்கும் அரசியல் ஆளுமையே காணப்படவில்லை,

நிர்வாகப்பரவலும் அதிகாரப்பரவலும் கடதாசியில் மட்டும் பயனுள்ளவை அல்ல. ஒரு சிறுபான்மை இனத்தின் அடிப்படை சுதந்திரங்கள் சட்டங்களை விட, கல்வியிலும் கலாசாரத்திலுமே தங்கியுள்ளன, அரசியல் சட்ட விதிகளைவிட, நிர்வாக நடவடிக்கைகளிலும் அரசியல் உறுதியிலுமே தங்கியுள்ளது.

(நன்றி. ட்றிபியூன்
13-10-79)

# பிடெல் காஸ்ட்ரோவின் புரட்சி வாழ்க்கை

## (பகுதி - 3)

1956ம் ஆண்டு நவம்பர் 25ந்திகதி கியூபா நாட்டை முற்றுகையிட பிடெல்லினுடைய தலைமையில் 82 புரட்சிவாதிகள் நன்றாகக் கட்டப்படாத கலகலத்துச் சப்தமிடும் ''கிரான்மா'' எனும் பெயர் கொண்டபட கொன்றிலே புறப்பட்டனர். நவம்பர் 30ந் திகதியன்று ஓரியண்டே மாகாணத்தின் தென்கரையில் இறங்குவதென அவர்கள் திட்டம் போட்டிருந்தனர். அதேசமயம்சந்தியாகோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பிராங்பாயிஸ் எனும்மாணவ தலைவனும் சர்வாதிகாரி பற்றிஸ்டாவுக்கெதிராககலகத்தை கிளப்பியிருந்தான்! நவம்பர் 30ந்திகதியின் சில மணிநேரங்களுக்கு சந்தியாகோ நகரத்தைமாணவர் தலைவன் பாயிஸ் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தபோதும் சர்வாதிகாரியினுடைய படைகள் இக்கலகத்தை உடனே அடக்கிவிட்டனர். இதனையறிந்த ''கிரான்மா'' படகில் வந்த புரட்சிவாதிகள் மீளவும் நடுக்கடலிற்குள் சென்று டிசம்பர் 2ம்திகதி ஓரியண்டே மாகாணத்தின் மேற்குக்கரையில் இறங்கினர் புரட்சிவாதிகளின் ''படையெடுப்புப் பற்றிச் செய்தி அறிந்திருந்த சர்வாதிகாரியின் இராணுவத்தினர் ':கிரான்மா'' படகை நோக்கிச் சுட்டபோதுபிடெல்லின் தலைமையில் புரட்சிவாதிகள் எல்லோரும் படகிலிருந்து குதித்துசதுப்புநிலக் கரையை நோக்கி நீந்த வேண்டி நேரிட்டது. புரட்சிவாதிகள் தாம்உடன்கொண்டுவந்திருந்த உணவுப்பொதிகள் தளபாடங்கள் ஆயுதங்கள் எல்லாவற்றையும்கடலினுள்ளேயே பறிகொடுத்தனர் எனினும்மனந் தளராது கரையை அடைந்த 82 புரட்சிவாதிகளும் நிராயுதபாணிகளாக களைத்து பசித்த நிலையில் நாட்டினுள் புகுந்து கொண்டனர்.

இவர்கள் சர்வாதிகாரியின்இராணுவத்தினரின்கண்களில் மணணைத்தூவி விட்டு சதுப்பு நிலப் பிரதேசங்களைக் கடந்து அலிக்ரியா டீ பியோ எனும் இடத்தை அண்மிக்க முனைந்த போது 82 பேரிலே சிலரை கிராமப்புறவாசிகள் காட்டிக் கொடுத்துவிட்டனர்! எனவேபிடெல்லின் ':சிறிய படை'' சிதறுண்டது சிலரை சர்வாதிகாரிபற்றிஸ்டாவின் இராணுவப்படையினர் சூழ்ந்து பிடித்துக் கொள்ள வேறு சிலர் தாமாகவே சரணடைந்து கொண்டனர்!

மொத்தமாக 70 பேரை ''போரில்'' இழந்து பிடெல் தன்னுடன் 11 பேரை மட்டுமே ஒருவராலும் அண்மிக்கமுடியாத சியேரா மயேஸ்ரா மலைப்பகுதிக்குக் கூட்டிச் செல்ல முடிந்தது.

இப் 12 பேரில் பிடெல்லின் சகோதரன் ராவுலும் சேகுவேவராவும் அடங்கியது பிடெல்லுக்கு கூடிய தெம்பைக் கொடுத்தது தன்னுடைய படையெடுப்பு மீண்டும் படுதோல்வியில் முடிந்தும் மிஞ்சியுள்ள 11 பேருக்குக்கூட போதிய உணவு வகையையோ போராட ஆயுதங்களையோ அல்லது இவற்றைப் பெறத் தேவையான பணத்தையோ தன்னால் வழங்கமுடியாத துர்ப்



பாக்கியநிலைஏற்பட்டும்இளைஞன் பிடெல் தன்னுடைய இலட்சியத்தைக் கைவிடவில்லை! அங்குதான் இந்நூற்றுண்டிலே திடகாத்திரமான இலட்சியவுறுதி படைத்த ஓர் இளைஞனுக்குஇருக்க வேண்டிய போர்த்தந் திரத்தை பிடெல் சமைக்க வழி வகுக்கப்பட்டது, மூன்று அடிகள் முன்னேறுவதற்கு ஓர் அடி பின்னெடுத்துவைக்கவேண்டுமெனில் அதனை நழுவவிடாதே எனும்போர் வியூக சமயோசிதத்தை பிடெல் ஏற்றுக் கொண்டான்,

தொடர்ந்த இரண்டு ஆண்டு காலத்திற்கு, இளைஞன் பிடெல்லும்அவனுடன் எஞ்சியிருந்த 11வீரர்களும், கெரில்லாப் போர்முறையை சிறிதுசிறிதாக பயன்படுத்தி சர்வாதிகாரியின் ஆட்சியைக் கலங்க வைத்தனர். 1957ம் ஆண்டிலிருந்து பிடெல்லின் புரட்சிப்படையில் ஒருபகுதியினர், இராணுவப் படையினரைத்தாக்கியும் பாலங்களுக்கும்,ரயில் தண்டவாள போக்குவரத்துப் பாதைகளுக்கும். தந்திக்கம்பிகளுக்கும், மின் இணைப்புக்களுக்கும் சேதத்தை விளைவித்து அதிகாரத்தினரின் கவனத்தை ஈர்த்துக்கொண்டிருந்த போது, இன்னொரு புரட்சிப் படைப்பகுதியினர் ஆயுதங்களையும்,தேவையானபணத்தையும் பல்வேறுவகைகளில் சேகரித்தனர் புரட்சிப்படையின் வேறொரு பகுதியினர், ஓரியண்டே மாகாணத்தின் கிராமப்புற விவசாயிகளுக்கு சர்வாதிகார ஆட்சியின் கொடுமைகளை விளக்கி. அவர்களைத் தமது போராட்டத்துக்கு தார்மீக ஆதரவு வழங்குமாறு வேண்டினர். ஏழை வர்க்கத்தைச்சேர்ந்த விவசாயிகள் கூட்டத்திற்கு, பிடெல் தன் புதிய சித்தாந்தத்தைஎடுத்து விளக்கினுன். முதலாளித்துவ, சுரண்டல் முதலைகளின் கைகளிலிருந்து நாட்டையும் பொருளாதாரத்தையும் விடுவித்து, சுயாதீன, நவ—சோசலிச பொருளாதாரப் பலம்வாய்ந்த புதிய பூமியைக் கட்டியெழுப்ப தான் கொண்டுள்ள கங்கணத்தையும், இப்போராட்டத்துக்கு தம்மாலியன்ற ஆதரவை வழங்குவதால், விவசாயிகள் பெறப் போகும் நன்மையையும் பிடெல் அவர்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தான். ஏழை வர்க்கத்தைச் சேர்ந்த பெரும்பாலோரை ஒன்றரை ஆண்டு காலத்தினுள் பிடெல் தன்வசம் ஈர்த்துக் கொண்டான். அத்துணையளவுக்கு பிடெல்லினுடைய

ச. ஸ்ரீகாந்தா

பிரச்சாரம் பலம் வாய்ந்ததாக இருந்தது என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

1958ம் ஆண்டு நடுப்பகுதி மட்டிலே, கியூபாவின் தொழிலாளி வர்க்கம் முழுவதும் சர்வாதிகாரி பற்றிஸ்டாவின் ஆட்சியில் நம்பிக்கை இழந்து. இளைஞன் பிடெல்லின் புரட்சிப்படையின் பின்னால் திரண்டு நின்றது. ஏற்கனவே,ஏற்பட்ட தோல்விகளில் கிடைத்த அனுபவங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த. பிடெல்லும் அவனது குழுவினரும் தயங்கவில்லை. ஒன்

—5-ம் பக்கம் பார்க்க

## எண்ணம்

### ஒழுக்கநெறிக்கோவை

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாகத்திலுள்ள ஆறு உள்ளூராட்சி மன்றங்களின் கூட்டணி உறுப்பினர்களுக்கென ஒழுக்க நெறிக் கோவையொன்று அண்மையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

கூட்டணியின் நிர்வாகத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் தூய்மையும் புனிதமும் சீரான கட்டுப்பாடான நிர்வாகமும் நிலவுவதை உறுதிசெய்வதற்கு இத்தகைய ஒழுக்க நெறிக்கோவை அவசியமானது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளுகிறோம்,

கடந்த மே திங்களில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், தமிழ் ஈழத்திலுள்ள ஆறு உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிப்பொறுப்பையும் எதிர்க்கட்சியாகிய தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் தமிழ் பேசும் மக்கள் மிகுந்த நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் ஒப்படைத்திருக்கிறார்கள். அதே சமயம் இலங்கையின் ஏனைய அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிப்பொறுப்பும் ஆளுங்கட்சியான யூ.என்.பியிடமே உள்ளன;

ஆக—முழு இலங்கையையும் எடுத்துக்கொண்டால், ஆறு உள்ளூராட்சி மன்றங்களில் மட்டுமே எதிர்க்கட்சியின் நிர்வாகம் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு சாதாரண எதிர்க்கட்சி மட்டுமல்ல—அது தமிழ்த்தேசிய இனத்தின் ஒரேயொரு விடுதலை இயக்கமுமாகும், விடுதலை இலட்சியம் ஒன்றுக்காகவே தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எந்தத்தேர்தலிலும் அது பாராளுமன்றத் தேர்தலானாலும், உள்ளூராட்சி தேர்தலானாலும் வாக்களித்து அபரிதமான வெற்றியை ஒவ்வொருமுறையும் ஈட்டிக் கொடுக்கிறார்கள்:

ஓர் அரசியற் கட்சியைவிட, ஒரு விடுதலை இயக்கத்துக்குத்தான் ஒழுங்கும், கட்டுப்பாடும் மிகவும் இன்றியமையாததாகும், அப்போதுதான் அந்த இயக்கத்தின் மீது மக்களின் நம்பிக்கையும் விசுவாசமும் குன்றாமலிருக்கும்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக விளங்கும் கூட்டணி, தமிழ்ப் பகுதி உள்ளூராட்சி மன்றங்களில் ஆளுங்கட்சியாக விளங்குகிறது. ஆட்சிப் பொறுப்பில் ஒரு கட்சி இருக்கும்போதுதான் விழிப்பும் எச்சரிக்கையும் மிகவும் அவசியம்,

மனப்பலவீனமும் சபலமும் கொண்ட மனிதர்கள் ஒரு சிலர் எந்த இயக்கத்திலும் இருப்பதுண்டு, அத்தகைய சக்திகள் கூட்டணியிலும் இருக்கக்கூடும். அப்படிப்பட்டவர்களையும் அடையாளம்கண்டுகட்டுப்படுத்தி நேரிய பாதையிற்கொண்டு செல்லவும், கட்டுப்பாடு மீறுவோரை கூட்டணியிலிருந்து தூக்கியெறியவும், ஒழுக்க நெறிக்கோவை என்ற மூக்கணாங்கயிறு இப்போது பூட்டப்பட்டிருக்கிறது.

லஞ்சலாவண்யம், ஊழல். முறைகேடுகள், என்பன போன்ற குற்றச்சாட்டுக்களுக்கு துளியும் இடம் வைக்காமல். நம்மாலும் நல்ல திறமையான நிர்வாகத்தைத் தரமுடியும் என்பதை நிலைநாட்டிக்காட்ட வேண்டியது கூட்டணி ஆட்சிபுரியும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் கடமையாகும்:

தமிழர் விடுதலைக்கூட்டணி மேற்கொண்டிருக்கும் அரசியல் பயணம் நீண்ட நெடியது, புனிதமானது; தமிழினத்தின் உயிரோடு, உணர்வோடு பின்னிப்பிணைந்தது; அந்தப் புனிதமான இலட்சியத்துக்குப், அந்த இலட்சியத்துக்காக உழைக்கும் ஸ்தாபனத்துக்கும் ஒரு துளியாவது களங்கம் ஏற்படாமல், கண்ணும் கருத்துமாக கூட்டணியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் செயற்பட வேண்டும்.

தமிழ் ஈழத்தைக் கோரி நிற்கும் நாம், அதனை எவ்வளவு திறமையாகப் பரிபாலிப்போம் என்பதற்கு முன்மாதிரியாக. நமது கையில் உள்ள உள்ளூராட்சிசபைகளை நடத்திக்காட்டி, 'மக்களின் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் பெறவேண்டும் என்று உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு கூட்டணித் தலைவர் திரு. சிவசிதம்பரம் எடுத்துக்கூறிய அறிவுரை ஒவ்வோர் உறுப்பினரின் நெஞ்சிலும் எப்போதும் எதிரொலித்துக் கொண்டிருக்க வேண்டும்.

கூட்டணி வகுத்துள்ள ஒழுக்க நெறிக்கோவையை மீறுவோர் யாராக இருந்தாலும் தாமதமின்றி தயவு தாட்சண்யமின்றி, அவர்கள் மீது கூட்டணித் தலைமைப் பீடம்நடவடிக்கையெடுக்கவேண்டும். இதிலே பொறுமை காட்டினால் இயக்கமே அழிந்து விடும். இது நமது எச்சரிக்கை!

# "தமிழினத்தின் அடிப்படை சுதந்திரத்தையே நாம் நாடி நிற்கிறோம் - அற்ப சலுகைகளையல்ல!"

## யாழ் மத்திய கல்லூரிக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அமிர் பேச்சு

"தமிழ் மக்கள் இன்று வேண்டி நிற்பது ஏதோ ஒரு சில உரிமைகளை அல்ல; எமது இனத்தின் உரிமைகளுக்கெல்லாம் அடிப்படையான சுதந்திரமே எமக்குத் தேவை. இச்சுதந்திரக் கோரிக்கையை கடந்த பொதுத்தேர்தலின் போது முன்வைத்து தமிழ் மக்களின் அங்கீகாரத்தை, ஆணையைப் பெற்றிருக்கிறோம். தேர்தலின்போது முன்வைத்து தமிழ்மக்களின் அங்கீகாரத்தை, ஆணையைப் பெற்றிருக்கிறோம். தேர்தலின் பின்னர், கடந்த மூன்று ஆண்டுகளில் நமது கோரிக்கையை உலக நாடுகள் அறிய வைத்திருக்கிறோம்"

இவ்வாறு தமிழர் தலைவர் திரு. அ, அமிர்தலிங்கம் பா. உ. அவர்கள் அகில இலங்கை அரசினர் பாடசாலை கல்வி நிறுவனங்கள், ஊழியர் சங்கம் அளித்த வரவேற்பு விழாவில் பேசும் போது குறிப்பிட்டார். யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றது. திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

எதிர்க்கட்சித் தலைவர் பதவி, சிங்கள மக்கள்விட்ட தவற்றினால் தற்செயலாக எனக்குக் கிடைத்தது. இதை அவர்களால் இப்போது பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

"எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கும். விடுதலை இயக்கச் செயலதிபர் பொறுப்புக்குமிடையே முரண்பாடு ஏற்படலாம். இதை நான் பாராளுமன்றத்திலும் சொல்லியிருக்கிறேன். இதுவரை காலமும் முரண்பாடு ஏற்படாமல், இருகடமைகளையும் நிறைவேற்றி வருகிறேன்.

ஜமேய்க்காவில் நடைபெற்ற காமன்வெல்த் சங்கத்தின் மாநாட்டிலே நான் பேசியபோது தொகுதித் தேவைகளைக் கவனிப்பதிலும், விடுதலை இயக்கக் கடமையைச் செய்வதிலும், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிப்பதிலும் உள்ள முரண்பாடுகளை எடுத்துரைத்தேன். எந்த முரண்பாடு ஏற்பட்டாலும், மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிப்படி விடுதலை இயக்கத்துக்கான பணியைச்செய்தே ஆக வேண்டுமென்று அங்கு வற்புறுத்தினேன். அன்றிரவு எனது பேச்சை ஜமேய்க்கா வானொலி ஒலிபரப்பி இலங்கை நண்பர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இன்று நாம் மிகவும் நெருக்கடியான கட்டத்தில் செயற்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த நாட்டின் வரலாற்றில் எதிலும் முன்னணியில் நின்றவன் தமிழன், அரசியலில், தொழிற்சங்கப் போராட்டங்களில் எதிலுமே முன்னணி வகித்து வந்திருக்கிறோம். இலங்கைக்குப் பூரண சுதந்திரம் தேவையென்று முதலில் தீர்மானித்தது யாழ்ப்பாணம் வாலிபர் காங்கிரஸ்மாநாடேயாகும், டொனமூர் அரசியல் திட்டத்தைப்பகிஷ்கரிப்பதிலும் தமிழ் மக்களே முன்னணி வகித்தனர்.

சேர். ஜோன். கொத்தலாவலை போன்ற சிங்களத் தலைவர்கள் சேர். பொன். இராமநாதனை தேரில் ஏற்றி இழுத்தார்கள் அன்று. இன்று இந்தஉண்மைகளைக்கூட ஒப்புக்கொள்ளமறுக்கின்றனர்.

எம்மை நசுக்கி அடக்கி ஒடுக்க முயற்சி நடக்கும் இச்சமயத்தில்தான் தமிழன் தன் சுதந்திரத்தைப்பற்றிச் சிந்தித்துப்போராட முன்வந்திருக்கிறான். இலங்கை இரண்டு தேசிய இனங்கள் வாழும் ஒரு தீவு. ஒன்று ஆளும் இனமாகவும் மற்றொன்று ஆளப்படும் இனமாகவும் இங்கு இருக்க முடியாது. தமிழினமும் தன்னைத்தானே ஆளும்இனமாக விடுதலை பெறவேண்டும்.

தமிழினம் ஒடுக்கப்பட்ட ஒரு தேசிய இனம் என்பதை இடதுசாரி இயக்கங்கள் பலவும் இப்போது ஏற்றுக் கொண்டுள்ளன. நம்மை நாம் ஆளவேண்டும் என்று நாம் கூறியபோது நம்மை வகுப்புவாதிகள் என்றவர்கள், இன்று நமது தேசிய விடுதலைப் போராட்டமே உண்மையான விடுதலைப் புரட்சி என்பதை ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

தமிழ் தேசிய இனத்துக்கு சுயநிர்ணய உரிமை உண்டென்பதை தென்னிலங்கையிலுள்ள இடதுசாரி இயக்கங்கள் இப்போது கொள்கையளவில் ஏற்கத்தொடங்கியுள்ளன. இதனை வெளிநாடுகளும் அங்கீகரிக்கச் செய்வதற்காக நாம் துரிதமாகப் பணியாற்றி வருகிறோம்,

எதிர்க்கட்சித் தலைமை தமிழனுக்கு கிடைத்ததால், உலக அரங்கில் எமது விடுதலைக்கோரிக்கையை எடுத்துக்கூற அருமையான வாய்ப்பு ஏற்பட்டது. அதை சரியாகப் பயன்படுத்தி வருகிறோம்; அதே சமயம் நமது பலத்தைச் சரியாக மதிப்பிட்டு, அதற்கேற்றவாறு நடக்க வேண்டும், கடைசியில் கையாள வேண்டியது எது என்பதைத் தெரிந்தெடுத்து அதனை நிறைவேற்றியே தீருவோம்"

—இவ்வாறு திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

## இலங்கையில் தமிழர் சனத்தொகை வீழ்ச்சி

இலங்கையில் தமிழர்களின் சனத்தொகை வளர்ச்சி தான் ஏனைய இனங்களை விடக்குறைவாக விருக்கிறதென்றும் இலங்கைத் தமிழர்களின் சனப்பெருக்க விகிதம் வீழ்ச்சியடைந்து வருவதாகவும் தகவல்திணைக்களத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் தெரிவிக்கப்பட்டது. தகவல் திணைக்கள இயக்குநர் திரு அனுரா குணசேகராவே இத்தகவலை வெளியிட்டிருக்கிறார். அதே சமயம் சிங்கள மக்களின் சனத்தொகை அமோக வளர்ச்சியடைந்து வருவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

—ஆதாரம்; (வீரகேசரி 17.10.79)

## யாழ் மாநகரசபை ஐ. நா தினத்தை கொண்டாடும்

யாழ் மாநகரசபை ஐக்கிய நாடுகள் தினத்தை எதிர்வரும் 24.10-79ல் அனுட்டிப்பதென தீர்மானித்துள்ளது இதற்கான ஏற்பாடுகள் யாழ் மாநகர முதல்வர் இராசா விசுவநாதன் தலைமையில் நடைபெற்று வருகின்றன. எதிர்க்கட்சித் தலைவர் அமிர் கூட்டணித் தலைவர் சிவா, சிந்தனைசிற்பி கதிரவேற்பிள்ளை பேராசிரியர் நேசையா உட்பட பல அறிஞர்கள் இத்தினத்தில் உரையாற்றுவார்கள்.

## செவ்விந்திய இனத்தை அழிக்க கட்டாயக் கருச்சிதைவு!

அமெரிக்காவின் பழமை மிக்க இனமான செவ்விந்திய இனத்தை முற்றாக அழித்தொழிக்கும் நோக்குடன் அவர்கள் கட்டாயக் கருச்சிதைவுக்கு உள்ளாக்கப்படுவதாக புகார் செய்யப்பட்டுள்ளது, ஒரு சிறுபான்மை இனத்தை அழித்தொழிப்பதற்கு செய்யப்படும் கட்டாயக்கருச் சிதைவை எதிர்த்து செவ்விந்தியர்கள் குரலெழுப்பியுள்ளனர்.

# நீதியமைச்சரின் உதவியுடன் குடியேறிய அகதிகளை பொலன்னறுவை அரசாங்க அதிபர் வெளியேற்றுவது நீதியானதா?

களனியாமடு முழுக்க முழுக்க அகதிகளைக் கொண்டதொரு புதுக்கிராமம்-இக்கிராமம் மட்டக்களப்பு—பொலநறுவை மாவட்ட எல்லைக் கோட்டின் இருமருங்கிலும் அமைந்துள்ளது. குடியேறியிருக்கும் அகதிகள் கடந்த இனக்கலவரத்தின் போது பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள காண்டக்காடு முத்துக்கல் சொருவில் ஆகிய பூர்வீக தமிழ் கிராமங்களில் இருந்துவிரட்டப்பட்டவர்கள்.

கடந்த இருவாரங்களுக்கு முன்னர் அரசாங்க அதிகாரிகள் சிலர் ஹெலிக்கொப்டரிலும் ஜீப்வண்டியிலும் பொலன்னறுவையில் இருந்து இக்கிராமத்திற்கு வந்தார்கள். இரண்டுவருடங்கள் நிம்மதியாக வாழ்ந்த அப்பாவித் தமிழ் மக்கள் ஒன்று சேரும்படி கட்டளையிடப்பட்டனர். அதிகாரிகளின் கைகளில் பெயர்கள் எழுதப்படாதப் படிவங்கள் காணப்பட்டன. அந்தப்படிவங்களில் பொலன்னறுவை அரசாங்க அதிபர் கைச்சாத்திட்டிருந்தார். தமிழ் குடும்பத்தினர் ஒவ்வொருவரினதும் பெயர்களை அந்தப் படிவங்களில் எழுதி அவற்றை அவர்களிடம் அதிகாரிகள் கொடுத்து நீங்கள் இன்னும் மூன்று தினங்களில் இங்கிருந்து வெளியேறிவிடவேண்டும் இல்லையேல் உங்கள்வீடுகளையெல்லாம் நெருப்புக் கொளுத்தி அழித்து விடுவோம் என்றனர். அத்துடன் தங்கள் பேச்சை உறுதிப்படுத்தும் முகமாக ஒரு வீட்டை உடைத்து சுக்கு நூருக்கினார்கள்.

அந்த வேளையில் அந்தக் குடியேற்ற வாசிகளில் ஒருவர் நீதியமைச்சர் தேவநாயகம் அவர்களுடன் அவர் களனியாமடுவுக்கு வந்தபோது சேர்ந்தெடுக்கப்பட்ட புகைப்படத்தைக் காட்டி இவர் உதவியுடன் தான் அகதிகளாக வந்தபோது இங்கு குடியேறினோம் என்று சொன்னார், அப்போது அதிகாரிகள் தலைவன் சிங்கள மொழியில் மொஉறுட்டவடா லொக்கு மினியா தமாய் கீவே உம்பலாவ மெயின் யன்னன்ட கியலா இவனைவிடப் பெரியவன்தான் உங்களை இங்கிருந்து வெளியேற்றும்படி சொன்னான் என்றான்.

யார் இந்த லொக்கு மினியா? கிழக்கின் தந்தை என்று சிலராலும் எல்லாளன் என்று கல்வி அமைச்சராலும் புகழ் மாலை சூடப்பட்ட திரு, தேவநாயகம் அவர்கள் உடனேயார் இந்த லொக்கு மினியா என்று அறியவேண்டும். மதுறு ஓயாப் பிரதேசத்தில்தொகுதிக்கு 1000 குடும்பங்களாக குடியேற்றப்படுவர் என்று அமைச்சர் காமினி திசநாயக்க அடிக்கடி சொல்லிவருகிறார். திரு. தேவயநாகம் அவர்களை என்றோ ஒரு நாள் யு.என்.பி.யினர் முதுகில் குத்துவார்கள் என்பது அரசியல் தெரிந்த குழந்தையும் அறிந்தவிடயம். குத்து விழத்தொடங்கிவிட்டதா என்பதுதான் ஆழ்ந்துகவனிக்க வேண்டியது.

த.வி. கூட்டணியினரும். இது எங்கள் பிரச்சினையல்ல என்று ஒதுங்கி விடாமல் இந்த லொக்குமினியாவைக் கண்டுபிடித்து ஜனாதிபதியிடம் தொடர்பு கொள்ள வேண்டும்.

களனியாமடுவில் கடமையாற்றிவிட்டு அவ்வதிகாரிகள் ஆண்டாள் குளத்திற்குச் சென்றார்கள். இக்கிராமம் மாவட்டஎல்லைக்கோட்டிலிருந்து ஒரு மைல் தூரம் கல்குடாத் தொகுதியினுள்ளே அமைந்துள்ளது. இங்கு குடியேறியிருப்பவர்கள் கடந்த இனக்கலவரத்தின் போது கம்பளை குருநாகல் கண்டி ஹரிபஸ்பத்துவ ஆகிய இடங்களிலிருந்து வந்து குடியேறியவர்கள் இவர்கள் தங்கள் பிரதிநிதிகளிடமிருந்து சிபார்சுக்கடிதங்கள் கொண்டுவந்த போது நீதி அமைச்சர்அவர்களை அங்கு குடியமரச்செய், தார். இவர்களுக்கென்று ஆண்டான்குளம் ரூபா 300 000/—செலவில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் புனருத்தாரணம் செய்யப்படுகிறது. இருப்பினும் இவர்களையும் வெளியேறும்படி அவர்கள் கட்டளையிட்டனர்.

அதிகாரிகளின் இச்செய்கையால் லொக்கு மினியாக்களும்பொடி மினியாக்களும் ஒரு பெரிய உண்மையை வெளிப்படுத்து கின்றனர், மேடைதோறும் பத்திரிகைகள் வாயிலாகவும் ஐக்கிய இலங்கையைஉருவாக்குவது பற்றிப் பேசியபோதும் குறிப்பிட்ட சில பகுதிகளில் தமிழ் பேசும் மக்கள் இருக்கக்கூடாதென்பதே அவர்களின் உள்ளக்கிடக்கை இதற்கு உதாரணம் புனானையிலிருந்து இரு மைல் தூரத்திலுள்ள கடவத்தைமடு. ஆறு வருடங்களுக்கு முன்னர் அங்கு வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்கள் வலோற்காரமாக வெளியேற்றப்பட்டனர்; இதனை அமைச்சர்களான தொண்டமானும் தேவநாயகமும் உணரவேண்டும். தேன்மதியான இக்காலத்தில் தமிழ்மக்களின் சரித்திரத்தை அவர்களுக்குபாதகமாக மாற்றிக் கொண்டதோடு மட்டுமன்றி அவர்களின் பாரம்பரிய பூமி பறிபோகும்போது வாழாவிருக்கிறீர்கள். த.வி. கூட்டணியினரும் களனியாமடுகுள பிரச்சினையில் ,அக்கறை காட்டாதது வேதனையான தொன்று.

களனியாமடு ஆண்டான் குளம் பிரச்சினை மாவட்ட அமைச்சர் கனகரத்தினத்தின் தலையீட்டால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு பரிசீலனை பண்ணப்படுகிறது இப்பிரச்சினை ஆராயப்படுமிடத்து இரண்டு மிக முக்கியமான குறிப்புக்களை மேல் குறிப்பிட்ட அமைச்சர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் அறியத் தருகிறோம்;

1. களனியாமடு கிராமம் மாவட்ட எல்லைக்கோட்டில் அமைந்துள்ளது, இங்கு குடியேறியிருக்கும் தமிழ் மக்கள் இனக்கலவரத்தின் போது பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள காண்டக்காடு,முத்துக்கல்,சொருவில் ஆகிய இடங்களிலிருந்து வந்தவர்கள். இவர்களின் நலன்களை பொலன்னறுவை அரசாங்க அதிபர் கவனிக்க வேண்டுமே ஒழிய அவர்களை அடித்து விரட்டக்கூடாது,

2. ஆண்டான்குளம் மட்டக்களப்பில்அமைந்துள்ளது இங்கு குடியேறியிருக்கும் மக்களை வெளியேறும்படி உத்தரவிட பொலன்னறுவை அரசாங்க அதிபருக்கு அதிகாரமில்லை;

இக்குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு மேல் குறிப்பிட்டவர்கள்இப்பிரச்சினையை அணுகி வெற்றி காண வேண்டும். இல்லையேல் பொலன்னறுவை மாவட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தை நோக்கி விரிந்து கொண்டே வரும்.

க: மதிசேகரன்
கல்குடா வீதி
வாழைச்சேனை.

---

## பிடெல் காஸ்ரோ--

—3-ம் பக்கத் தொடர்

றரை ஆண்டுகளாக பதுங்கிக் பதுங்கி பல்வேறு முனைகளில், பல்வேறு நிலைகளில் தமது பலத்தை வளர்த்துக் கொண்ட பிடெல்லின் புரட்சிப்படையினர், தமது பலங்களின் கூறுகளை ஆகஸ்ட் 1958ம் ஆண்டில் ஒன்றுக்கி, ஒரேயடியாக சர்வாதிகாரி பற்றிஸ்டாவின் ஆட்சியைத் தகர்க்க போராட்டத்தைத் தொடங்கினர். தீவின் வெவ்வேறு பகுதிகளில், புரட்சிப் படையினர் ஒரே சமயத்தில் திட்டமிட்டு தாக்குதலை நிகழ்த்தியபோது, சர்வாதிகாரியின் படைப்பலமோ. பணப்பலமோ ஒருவகையிலும் ஈடுகொடுத்து நிற்க முடியவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக,மக்களின் தார்மீக பலம், பிடெல்லின் பக்கமே சாய்ந்து நின்றபடியால். கியூபாநாட்டிலே பல்லாண்டு காலம் வேரூன்றியிருந்த சர்வாதிகார ஆட்சி ஆட்டங்கண்டது. 1959ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி. சர்வாதிகாரிபற்றிஸ்டாவின் படை முறியடிக்கப்பட்டு, சர்வாதிகாரி நாட்டை விட்டுத் தப்பியோடினான். பணக்கார முதலைகளின் சுரண்டலால் பொலிவிழந்த கியூபா நாடு தனக்கு மறுவாழ்வு கொடுத்த திண்மையுடன் போராடிய இளைஞன் பிடெல் காஸ்ட்ரோவின் காலடியில் கிடந்தது. அப்போது, பிடெல்லுக்கு வயது 32 மட்டுமே!

11 தோழர்களுடன் மட்டும், நிராயுத பாணியாக, தன்னாட்டிலேயே, இராணுவத்தால் தேடப்பட்டு, ஒதுங்கிய ஓர் இளைஞன், இரண்டாண்டுகளுக்குள் சர்வவல்லமைபடைத்த ஒரு சர்வாதிகாரியை, மதியூகத்தால் முறியடித்த சாதனை நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சகாப்தத்திலே.இற்றைக்கு 20 ஆண்டுகளுக்கு முன்னர்தான் நடந்தது. அவன் தெய்வவரம் பெற்றுப்போராட வில்லை; மந்திரங்கள் உச்சாடனம் செய்து''பாசுபதாஸ்திரம்'' ''இராமபாணம்'' போன்ற சர்வவல்லமை பொருந்திய ஆயுதங்கள் ஒன்றையும் கைவசம் வைத்திருக்கவில்லை, தன்னம்பிக்கை, விடாமுயற்சி, மனவுறுதி ஆகிய மூன்றே மூன்று பிரதான ஆயுதங்களையே தன்வசம் வைத்திருந்தான்; அவற்றைக்கொண்டே விடுதலைப்போரை நடாத்தி வெற்றி பெற்றான். இந்த இளைஞன் பிடெல்லினுடைய வீரவரலாறு, நாட்டின் விடுதலைக்காக பலவேறு அடக்குமுறைகளுக்கிடையில், நம்பிக்கையுடன் போராடும் வீர இளைஞர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமையும் என்பதில் யாருக்காவது சந்தேகம் இருக்குமா?

---

## முல்லைத்தீவு ப. நோ. கூ. சங்கத்தில் கூட்டணி நிர்வாகம்

அண்மையில் நடைபெற்ற முல்லைத்தீவு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத் தேர்தலில் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அதன் நிர்வாகத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

சங்கத்தின் தலைவராக முன்னாள் செம்மணி கிராமச் சங்கத்தின் தலைவரும் சமாதான நீதவானுமாகிய திரு. நல்லதம்பி குமாரசாமி அவர்களும் துணைத் தலைவராக திரு;கூ: ஞானராஜனும் தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் முதலாம் திகதி நடைபெற்ற நெறியாளர் சபைத் தேர்தலில் கிளையின் குழு உறுப்பினரான திரு: ந. குமாரசாமி தற்போதையத் தலைவர் அவர்கள் கலந்து கொள்ளா வண்ணம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் இதை ஆட்சேபித்து முல்லைத்தீவு பா. உ. திரு. எஸ், செல்லத் தம்பு அவர்கள் பாராளுமன்றத்தில் உணவு கூட்டுறவுத் துறை அமைச்சரின் விசேட கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தார்; அமைச்சர் அவர்களும் இதுசம்பந்தமாக உடன் நடவடிக்கையெடுத்து பழைய தேர்தல் செல்லுபடியற்றதனால் மறுதேர்தல் நடாத்தும்படி ஆணையாளர் மூலம் உத்தரவிட்டிருந்தார். இதன்படி முல்லைத்தீவுத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இரவு பகலென்று பராது தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்காக உழைத்து வெற்றியும் பெற்றனர்,

---

யாழ் மாவட்டத்தில்
செய்தித் தணிக்கை
அவசரகாலச்சட்டம்
**இன்றுடன்**
**103-வது நாள்**

---

## இரங்கல்

யாழ்ப்பாணம் நீர்வேலியைச்சேர்ந்தவரும் முன்னாள்சுதந்திரன்ஊழியருமான திரு ரி. பத்மநாதன் அவர்களின்அன்பு மனைவி திருமதி சகுந்தலாதேவியும்(வயது26) மகன்செல்வன்—ப.நந்தகுமாரும் அவர்கள் வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தின்போது காலமானார்கள்.

மனைவி—மகனை இழந்து தவிக்கும் திரு: பத்மநாதன் அவர்களுக்கு சுதந்திரன் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது; ஆர்—

---

## அடுத்த புதன் இதழிலிருந்து...

எதிர்வரும் 24-10-79 புதன் இதழிலிருந்து அவசரகாலச்சட்ட விவாதத்தின் போது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் ஆற்றிய உரை முழுமையாகத் தொடர்ந்து வெளி வரும். —ஆர்.

# தமிழ்க் கவிதைகளில் உவமை நயம் கருணுநிதி எடுத்து விளக்குகிருர்!

“சுப்பிரமணிய பாரதி பாடினுர்,

''கலவி நடுப்பாதையிலே காதல் பேசி என்று இது மனமகிழ்மன்ற விழா என்பதால் மகிழ்ச்சியான விஷயங்களை பேசுகிறேன் ''கலவி நடுப்பாதையிலே காதல் பேசி'' என்று யார் சொன்ஞர்கள்? இதுவரையில் முதலிலே கண்ணே மணியே அன்பே அமுதே என்றெல்லாம்ஆரம்பத்திலே பேசுகின்றபேச்சுக்கள்! பேச்சுக்களல்லகலவி நடுப்பாதையிலே காதல் பேசி— அப்போது உதிர்கின்ற அந்த வார்த்தைகளுக்குள்ள உயிர்ப்பே தனி அனுபவித்துபாடி இருக்கிருர் சுப்பிரமணிய பாரதியார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய பாடல்கள்பலவற்றை நான் படித்திருக்கிறேன் பல கவிதைகள் எனக்கு மனப்பாடம் ஆஞல் எனது நெஞ்சை விட்டு அகலாதஒருஉவமை அவருடைய நூல் ஒன்றில் தொடக்கத்திலே குறிப்பிடுகிருர்.

''குன்றுபோல அன்னம்
குவித்திருக்கு என் எதிரில்
உண்ணமுடியாமல்
ஊராள்வான் கூர்வாளும்
வண்ணமுடி சொல்வாக்கும்
வந்து மறிக்குதடி''

குன்றைப்போல என் எதிரிலே அன்னம்குவித்திருக்கிறது நான் தாராளமாகச் சாப்பிடலாம் அப்படி என் முன்ஞல் நீ நின்று கொண்டிருக்கிருய் உன்னேஎனக்குரியவளாக ஆக்கிக் கொள்ளலாம், ஆஞலும் உண்ணமுடியாமல் ஊராள்வான் கூர்வாளும் வண்ணமுடி செல்வாக்கும் வந்து மறிக்குதடி என்று காதலன்கூறுவதாகப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடிக்காட்டுகிருர்.

நிலாவைப்பார்த்து— அது முகிலில் மறைந்தும் ஒளிந்தும் வருவதைப் பார்த்துக் கேட்கிருர்.

''நீலவான் ஆடைக்குள் உடல்
மறைத்து
நிலாவென்று காட்டுகின்ருய்
ஒளிமுகத்தை
கோலமுழுவதும் காட்டிவிட்டால்
உலகம்
காதல் கொள்ளேயி லேசாமோ',

நீ உன்னுடைய முழு உருவத்தையும் காட்டாததற்கு காரணம் உலகம் காதல் என்னும் கொள்ளே நோயால் செத்துவிடும் என்னும்பயத்தாலா முகத்தை மாத்திரம் காட்டுகின்ருய் நிலவே?

நீலவான்என்கின்ற ஆடைக்குள்ளே உடலே மறைத்து நிலாவென்று காட்டுகிருய் ஒளிமுகத்தை கோலமுழுவதும் காட்டிவிட்டால் உலகம் காதல் கொள்ளேயிலே சாமோ? என்று கேட்கிருர்.

உவமைக்கு பாரதிதாசன் பரம்பரைக்கு இன்ஞெரு கவிஞர் உண்டு. சுரதா சுப்புரத்தினதாசன் பாரதிதாசனுடைய இயற்பெயரே சுப்புரத்தினம் அதைத்தான் பாரதிதாசன்என்று மாற்றி கொண்டார் அந்தவழியிலே வந்த சுப்புரத்தினதாசன் என்கின்ற சுரதா வானில் இடி இடிக்கின்றதல்லவா அதற்கு உவமைகாட்டுகிருர். எந்த கவிஞனும் காட்டாத உவமை. இருமுகின்ற மேகக்கூட்டம் மேகங்கள் ஒன்ருேடொன்றுஉராய்ந்து அங்கு ஏற்படுகின்றஒலி இருக்கின்றதேஅதுஉறுமிக் கொண்டே இருக்கிறதே அதை என்னே எழுதச் சொன்ஞல் உறுமுகின்ற மேகக் கூட்டம்என்று தான் எழுதுவேன். கவிஞர் சுரதா எழுதிக் காட்டுகின்ருர். இருமுகின்ற மேகக்கூட்டம் என்று மேகக் கூட்டங்கள் இருமிக் கொண்டிருக்கிறதாம்.

இப்படிப்பட்ட அருமையான கவிஞர்கள்இன்றைக்கு திருவள்ளுவருடைய வாரிசுகளாக சொல்லாமல் விட்டால் யாருக்கேனும் வருத்தம் வரலாம். ஏன்—கம்பனுடைய வாரிசாக— கம்பனுடைய உவமை நயத்தையும், வர்ணனே'யையும் சொல்லுகின்றேன்; எழுதிய கதையின் கருத்தை ஒத்துக் கொண்டல்ல: — பாரதியின் வாரிசாக, பாரதிதாசனின் வாரிசாக—இளங்கவிஞர்கள் இன்றைக்கு ஆயிரமாயிரம் பேர் தமிழகத்திலே தோன்றி இலக்கியத்தை வளர்த்துக் கொண்டிருக்கிருர்கள்.

''தொட்டி நீலத்தில் சுண்ணும்பு கலந்த கலப்பன்ன இருள் தன் கட்டுக் குலேந்தது''

தொட்டி நிறைய நீல வர்ணத்தை கரைத்த. தண்ணீரை வைத்திருக்கிருர்கள். அந்த நீல வர்ண சுண்ணும்பை எடுத்துப் போட்டுக் கொண்டே இருக்கிருர்கள். தொட்டிக்குள்ளே இருக்கின்றநீல வண்ணத் தண்ணீர். கொஞ்சம் கொஞ்சமாக சுண்ணும்பைப் போடும்போது எப்படி அந்த நீலம் மாறி வெண்மை யாகுமோ அதுபோல தொட்டி நீலத்தில் சுண்ணும்பு கலந்தகலப்பன்ன இருள் தன் கட்டுக் குலேந்தது என்று பொழுது விடிவதைப் பற்றி பாடிய ஒரு புலவன் பாவேந்தர் பாரதிதாசன்!

பொழுது விடிகிறதுஇருண்டிருந்த உலகம் விடியலுக்குத் திரும்புகிறது. இருள் மறைகிறது, இருள் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து தான்பகல்வரும்திடீ ரென்று விளக்கு நின்று இருள்வதைப் போலவோ அல்லது திடீரென்று மின்விளக்கைப் போட்டதும் இருள்மறைந்து ஒளி வருவதைப் போலவோ இரவுமாறி பகல் வருவது இல்லே. பேட்அவுட் என்று சொல்வார்களே அதைப் போல இருள் பேட் அவுட் ஆகிதான் பகல்வரும் இதனே புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடியிருக்கிருர்.

இத்தகைய உவமை நயம் கொண்ட கவிஞர்கள்நிறைந்தது தமிழகம் அரசன் மகளே காதலிக்கிருன்: எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும் நானே உன்னேமணப்பேன் என்று கூறுகிருன் காதலிப்பவனே ஒரு கவிஞன் கவிஞர்கள் எல்லாம் வீரர்களாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. வீரமான கவிதைகளே எழுதிஞலும் கூட வீரமாக இருப்பார்கள் என்று எல்லோரையும் சொல்லிவிட முடியாது, அவர் சொல்கிருர்;

அறிஞர் அண்ணு அவர்கள் முதலமைச்சராக இருந்த போது பொதுப்பணித்துறை அமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்த நான், வேளாண்மை வளர்ச்சிக்கான ஒரு கவியரங்கம் தஞ்சை மாவட்டத்திலே குடந்தை நகரிலே நடந்த போது கலந்து கொண்டேன்.

அந்த கவியரங்கத்திலே வேளாண்மைக்கு தேவையான ஆறுகளேப்பற்றி நான் பாடியபோது அந்த ஆறுகளேப் பாட்டின் நடுவே ஒன்ருேடொன்றுஎப்படி இணைத்தேன் என்பதை தற்பெருமைக்காக அல்ல—உங்களுக்கெல்லாம் மனமகிழ்ச்சி ஊட்டுவதற்காக-ஒரு இசைவாணனே அழைத்துப்பாடச் சொன்ஞல் அவனுக்குத் தெரிந்த பாடல்களே அவன் பாடுவதில்லேயா? அதைப் போல கவிஞர் என்று சரியாகவோ தவருகவோ கருதிக் கொண்டிருக்கின்ற ஒருவனே நீங்கள் அழைத்திருக்கின்ற காரணத்தால்நான் எழுதிய எனக்குத் தெரிந்த ஒரு கவிதையை உங்களிடத்திலே சொல்ல விரும்புகின்றேன்.

வீட்டோரம் காட்டோரம் தேர்தல்
ஓட்டோரம் இருக்கும் நல்லீர்—சிறிது
ஆற்ருேரம் பாரீர்; இன்று என்
பாட்டோரம் வாரீர் நன்று!
குடமுருட்டிக் காவிரிப் பெண் ஆடுகின்ற காட்சி
கண்டு—காதல்
கொள் இடம் இதுதான் என்று; காதல்
கொள்ளிடம் இது தான் என்று
வீரசோழன் வருகின்ருன் ஓடம் போக்கி என் மேல்
(வீரசோழன் என்பது ஒரு ஆற; அதைப்போலவே
ஓடம்போக்கி என்பதும் ஒரு ஆறு)
வை கை என்று வளேக்கின்ருன்
வைகை என்று வளேகின்ருன் உன் பல்
மணி முத்தா என நெளிகின்ருன்
காவிரியோ கண் சிமிட்டி, என்
மன்னியார் வருகின்ருள்;(மன்னியார் என்பது ஒரு ஆறு)
மறைந்திடுக அத்தான் என்கின்ருள்; அவனே
வரட்டுமே மன்னியார், நம்
காதலுக்கு அவளென்ன கல்லணையா?
காமினி பாமினி நாமினி காதலர்கள் (பாமினி
என்பது ஒரு ஆது)
ஆம் இனி திருமணமென்று பிறருக்குச் சொல்லி விடு
காதல் அக்கினி யாறுமோ கண்ணே அருகில் வந்துவிடு
யாரும் நம்மீது தப் பெண்ணுர் நம் (பெண்ணுர்
என்பது ஒரு ஆறு)
காதல் பிரிக்க வெண்ணுர் பிறர் (வெண்ணுர் ஆறு)
,'வெட்டார்'' நம் உறவெனினும் அத்தான்
(வெட்டாறு என ஒரு ஆறு)
வெட்டும் என்னேத் தடுக்குதென்ருள்,
வீரசோழன் விரைந்தணைத்துக் கொண்டவாறு
''பாலாறும்'' முன்னே பருகிடுவோம் வா என்ருன்
''மஞ்சளார்'' முகவதியும் அவன் மடிமீது சாய்ந்தபடி
மணமெப்போது அத்தான் என்ருள்
''பெரியாறு'' தலைமையிலே பெரிதாக நடக்கு
மென்ருன்.

நன்றி: முரசொலி

# மாவட்ட இணைப்புக்குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்

மாவட்ட அமைச்சர் தலைமையில் அண்மையில் யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெற்ற மாவட்டஇணைப்புக் குழுக்கூட்டத்தில் திருநெல்வேலியில் பாற்பண்ணை நிறுவுவதற்குத் தெரிந்தெடுக்கப்பட்ட இடத்துக்குநல்லூர் பா.உ. திரு. சிவசிதம்பரம் ஆட்சேபனை தெரிவித்தார். இந்தப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு குழுவை நியமிக்க வேண்டுமென்றும் காவலூர் பா.உ: கா,பொ. இரத்தினத்தின் பிரேரணை ஏற்றுக்கொள்ளப் பட்டது.

— — — — — — — — — — — —
— — — — — — — — — — — —
— — — — — — — — — — — —
— — — — — — — — — — — —
— — — — — — — — — — — —
— — — — — — — — — — — —
— — — — — — — — — — — —
— — — — — — — — — — — —
— — — — — — — — — — — —
— — — — — — — — — — — —
— — — — — — — — — — — —

சென்ற பெப்ருவரி மாதத்தில் யாழ்ப்பாணம் கச்சேரியில் போக்குவரத்து அமைச்சர் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருடனும் உத்தியோகத்தருடனும் நடத்திய உத்தியோக பூர்வமான கூட்டத்தில் யாழ்ப்பாணத்துக்கு 50 பஸ்களை அனுப்ப விரைவில் நடவடிக்கை எடுப்பதாகக் கூறியதை காவலூர் பா,உ: திரு.க, இரத்தினம் சுட்டிக்காட்டிப் பாராளுமன்றத்தில் இன்றுவரை 6புதிய பஸ்கள் மட்டுமே அனுப்பப்பட்டதாகக் கூறப்பட்டதால் அவசரம் தேவைப்படும் மிகுதி 54 பஸ்களையும் உடனே யாழ்ப்பாணத்துக்குப் பெறுதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென்று பிரேரித்தார், இந்தப் பிரேரணையும் ஏற்றுக்கொள்ளப் பட்டது. யாழ் மாவட்ட அமைச்சர் உடனே கவனிப்பதாகக் கூறிஞர்,

பொருள்களின் விலேயேற்றத்தால் பெரும்பாலான செலவு மதிப்பீடுகளேக் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்று திரு, இரத்தினம் குறிப்பிட்டார். இதனே ஏற்று வேண்டியநடவடிக்கைஎடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வேலணை மத்திய மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்றுச்செய்து வந்த கட்டிடவேலையைதமக்குத் தெரியாமல் ரத்துச் செய்ய முயன்றதற்கு திரு. இரத்தினம் ஆட்சேபனே தெரிவித்து அந்த வித்தியாலய அபிவிருத்திச்சபை தொடர்ந்து அந்த வேலையைச் செய்ய அனுமதிக்க வேண்டுமென்று வற்புறுத்திஞர். அனுமதிப்பதென

— — — — — — — — — — — —

கடந்தகால வழக்கத்துக்கு முழுவதும் மாருகப் பாராளுமன்ற உறுப்பினர்களேக் கலந்து கொள்ளாமலும் அவர்களுக்குத் தெரியாமலும் அவர்களுடைய தொகுதி அலுவல்களில் மாவட்ட அமைச்சு என்றபோர்வையில் ஒருவர் தலையிடுவதற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இழுக்குஉண்டாகும்வகையில்மாவட்டஅமைச்சைச்சேர்ந்த ஒருவர் செய்திகள் வெளியிடுவதற்கும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆட்சேபனே தெரிவித்தார்கள்,


## சுதந்திரன் (வாரமிருமுறை)
## சந்தா விபரம்

1-3-79 முதல் சுதந்திரன் உள்ளூர் (தமிழ் ஈழம், சிறீலங்கா) சந்தாவிபரம் வருமாறு:—

ஓராண்டு சந்தா — ரூபா 70.00
அரைஆண்டு " — ரூபா 35.00

அரைஆண்டுக்கு குறைவான சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. சந்தாத்தொகை காசோலையாகவோ காசுக்கட்டளை யாகவோ, 'சுதந்திரன்' என்ற பெயருக்கு எழுதப்பட்டு அனுப்பப்படவேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி:
நிர்வாகி சுதந்திரன்
15, மகாத்மாகாந்தி வீதி
யாழ்ப்பாணம்.

# "நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே"

பொருளாதாரப் பிரச்சனைகளே பல நாடுகளில் அரசியல் பூசம்பங்களை உருவாக்குகின்றன என நம்பப்படுகிறது! மன்னர்களின் மகுடங்கள் மண்ணில்உருண்டிருக்கின்றன—ஏன் மரணத்தையே தழுவியிருக்கிறார்கள்! மக்களாட்சியின் தலைவர்கள் மறுதேர்தலில் மகத்தான தோல்வி கண்டிருக்கிறார்கள் — இராணுவ ஆட்சியில்—சர்வாதிகாரிகள் இருந்த இடம் தெரியாது மறைந்திருக்கிறார்கள்! இவை — வரலாற்றேட்டில் வரையப்பட்ட நிகழ்ச்சிகள்!

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவான புரட்சியென்னும் பிரளயத்தில்பிரான்சுநாடேமூழ்கடிக்கப்படவில்லையா? மன்னரும் மகாராணியும் என்னானார்கள்? மக்களின் அந்த மாபெரும் கிளர்ச்சிக்கும்—எழுச்சிக்கும் காரணம் என்ன? முதலாளித்துவம் என்னும் மூட்டையை எத்தனை நாளைக்குத்தான் ஏழைகள் தங்கள் முதுகில் சுமந்துகொண்டிருக்க முடியும்? முடியரசு ஒன்று முடிந்த கதை இது.

குடியரசுகளுக்கும் குழி தோண்டியிருக்கிறது பொருளாதாரப் பிரச்சினை என்கின்ற பூதம்! 'வங்கபந்து' எனவாயார வாஞ்சையுடன் அழைக்கப்பட்ட முஜிபுர் ரகுமானுக்கு அப்படி ஒரு முடிவு ஏன் ஏற்பட்டது? தேசபிதா என்று தெரிந்திருந்தும் அவரைத்தேடி வந்து கொன்றார்களே-ஏன்? நாட்டில் நாளும் பொழுதும் வளர்ந்துவிஸ்வரூபமெடுத்து விட்ட வறுமை — ஊழல் மலிந்த நிர்வாகம்-உண்மை இதுதானே!

இப்படி — சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற சக்கரவர்த்திகள்—மன்னர்கள் — மக்களாட்சித் தலைவர்கள் பொருளாதாரப் பிரச்சனைக்குத் தாக்குப் பிடிக்காததால் போன இடமே தெரியவில்லை!

இலங்கை அரசியலிலும் என்ன நடைபெறுகிறது? ஆளும் கட்சிகளைத் தேர்ந்தெடுப்பவர்கள் யார்? மக்களா? அல்ல—அரிசி! அரசாங்கத்தை மாற்றியமைக்கும் அற்புதமான ஆயுதம் 6 ஆண்டுக்கொரு முறையே மக்களும் தலைவர்களும் அதன் அபார சக்தியைப் புரிந்து கொள்வர்! எனவே-

பொருளாதாரப்பிரச்சனைகள் தீர்க்கப்பட்டால் பூலோகமே ஒரு சொர்க்கமாகிவிடும் என்பர்! ஆனால்—இந்தக் கூற்றில் பாதி உண்மையே இருக்கிறது.

ஒரு நாட்டின் உயிர்ப்பிரச்சனை பொருளாதார ஏற்றத்தாழ்வு அல்ல — தலைமை! நல்லதொரு தலைமை நாட்டிற்குக் கிடைத்தால் எந்த ஒரு பிரச்சனைக்கும் எளிதில் தீர்வுகாண முடியும். பிரெஞ்சு நாட்டில் பிரளயம் ஏற்பட்ட தென்றால்—அந்நாட்டிற்கு ஏற்றதொரு தலைமையை லூயிஸ் மன்னன் அளிக்கத் தவறிவிட்டான் என்றுதானே பொருள்

ஈரான் நாட்டில் இன்றுகூட என்ன நடைபெறுகிறது? மன்னன் ஷாவால் மக்களுக்கொரு தலைமையை வழங்க முடியவில்லை. அதனால்—அவன் ஆட்சிக் கதிரையிலிருந்தே அகற்றப்பட்டான்! அவன் பின் ஆள வந்த மதத்தலைவர்—மக்கள் தலைவர் கொமெனியால் தானும் குடிதழுவி கோலோச்ச இயலவில்லை — இதன் காரணமே அந்நாட்டில் இன்னும் குழப்பம் — இரத்தக்களரி!

இராணுவ ஆட்சியைத் தூக்கி எறிந்துவிட்டு — மக்களின் இரட்சகன் என மார்தட்டி நாடாள வந்த பூட்டோ தூக்குக் கயிற்றில் ஏன் தொங்கும்படியாயிற்று? எதிர்கட்சிகளே இருக்கக்கூடாது — எல்லோர்க்கும் நீதி ஒன்றல்ல — இப்படி அவன் எண்ணினான்—முடிவு பயங்கரமாயிற்று!

ஆப்கானிஸ்தான் அதிபர் தராக்கி அகற்றப்பட்டு அடுத்தொருவர் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கிறாரே—எப்படி? தன் நாட்டிற்குத் தகுந்ததோர் தலைமையை அவரால் தரமுடியவில்லை — மாணவப் பிஞ்சுகளையே மனம்போனபடி சுட்டுப் பொசுக்கியவராயிற்றே—அஸ்தமனம் அணுகாமலா போகும்?

இடி அமினின் தலையில் இடி ஏன்விழுந்தது? காணும் பெண்களெல்லாம் கட்டிலுக்கு வரவேண்டும் மனித உயிர்களை மண் பொம்மைகளாகக் கருதவேண்டும்—கண்டபடி காசு நோட்டை அச்சடித்துத்தள்ள வேண்டும் — அந்நிய நாடுகளுக்கு அடிக்கடி சவால் விட்டுக்கொண்டே இருக்க வேண்டும். இப்படி — காட்டுத் தர்பார் நடத்திய அந்தக் கறுப்பர் நாட்டுத் தலைவன் கண்காணா இடத்தில்ஒழித்து வாழ வேண்டிய நிலை!

ஆம்! ஒருநாட்டின் உயிர் நாடி உயர்ந்ததோர்தலைமை உவப்பான ஆட்சி! இது உண்மை!

உரோமாபுரி என்றதும் இன்றுகூட எமது உடலில் உள்ள ரோமங்கள் எல்லாம் சிலிர்க்கின்றனவேஏன்? உலகம் புகழும் வண்ணம் அந்நாட்டிற்கு யூலியஸ் சீசர் ஒப்பற்றதோர் தலைமையைத் தந்ததுதானே காரணம்?

மகா அலக்சாந்தர் மசிடோனியா நாட்டிற்குத் தந்த மகிமை என்ன? யாராலும் வெல்லமுடியாத தலைமை! அப்படித்தானே?

இரண்டாவது மகாயுத்தத்தின் பேரழிவிலிருந்து இங்கிலாந்து நாட்டைக் காத்தது எது? வின்சன்ற் சேர்ச்சிலின் தலைமை: இல்லையா?

எத்தனையோ பிரச்சினைகள் இருந்தும் இந்திய நாட்டிற்கு அகில உலகரீதியிலும் புகழ்கிடைத்தது என்றால் அதற்குக்காரணம் ஜவஹர்லால் நேருவின் அசைக்க முடியாத தலைமையல்லவா?

அண்ணாவின் அற்புதமான தலைமைக்கு நிகரேது? தமிழகத்திற்கு மட்டுமல்ல—கட்சி உணர்வுகளுக்கு அப்பால் நின்று நாடு காத்த நாயகன் அல்லவா அவன்?

பிரெஞ்சு நாட்டின் வரலாற்றைப் படிப்பவர்கள் நெப்போலியனின்பெருமைக்குரிய தலைமையைப் பற்றி அல்லவா பேசுகிறார்கள்! ஐரோப்பா முழுவதற்குமே அரியதோர் தலைமையைத் தரமுயன்றவன் அல்லவா அந்த மாவீரன்!

1917 அக்டோபர் புரட்சிக்குப் பின்றஷ்யா அதிவேகமாக முன்னேறிற் றென்றால் அதற்குக் காரணம் லெனின் ஏற்படுத்திக் கொடுத்த தலைமைதானே!

மாசேதுங்கின் மாபெரும் தலைமையன்றோ செஞ்சீனாவுக்குச் சிறப்பை, யெல்லாம் வாரிவழங்கியது!

இப்படி—எந்த ஒரு நாட்டிற்கும் அச்சாணியாக—அரணாக இருப்பது அந்நாட்டின் தலைமை? இத்தகு தலைமையை—கேவலம்—ஓர் அரசியல் கட்சித்தலைவரால் தந்துவிடமுடியாது. தேர்தலைப் பற்றியே தினமும் சிந்திக்குமொருவர் (மாவட்ட சபை மசோதாவை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றினால் 1970ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோற்றுவிடுமென டட்லி சேனநாயக்கா கருதியதாக சிலமாதங்களுக்கு முன் ஜனாதிபதி ஜே. ஆர் தெரிவித்திருந்தார்) அவர்பிரதமரானாலுஞ்சரி— ஜனாதிபதியானாலுஞ்சரி— தேசத்தலைவராக எப்படி உயர்ந்துவிட முடியும்?

இலங்கை சுதந்திரம் பெற்றபிறகு ஏற்றதோர் தலைமை ஏற்பட்டிருக்குமானால், இங்கு வாழும் இரு பெரும் சமூகத்திற்கிடையேமோதலே உருவாகியிருக்காது இனத்துவேஷத்தைக் கிளப்பி இந்நாட்டின் தலைவராக விரும்புவோரால் எப்படி ஒருநல்ல தலைமையைத்தர முடியும்?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழ்ப்புலவர் மோசிகீரனார் தலைமையின் முக்கியத்துவத்தைப்பற்றி தருந்ததோர் பாடல் மூலம் விளக்குகிறார் அந்தப் பாடல்—

நெல்லும் உயிர் அன்றே
நீரும் உயிர் அன்றே
மன்னன் உயிர்த்தே
மலர் தலை உலகம்
அதனால், யான் உயிர்
என்பது அறிகை
வேல் மிகுதானை
வேந்தற்குக் கடனே
(புறம்)

## வாகரைவாணன்

அமெரிக்கா என்றதும் அதன் செல்வச் செழிப்புத்தான் அனைவருக்கும் நினைவு வரும்! ஆனால் இருநூறு ஆண்டுகாலத்துள் இப்படியொகு இணையில்லாச் சிறப்பை அந்நாட்டிற்குத் தந்தது ஜோர்ஜ் வாஷிங்டன் ஆபிரகாம் லிங்கன்—ரூஸ்வெல்ற்—கெனடி போன்றோரின் தலைமையல்லவா?

## மக்கள் குரல்

# மாணவர்களிடையே ஏன் இந்த பாரபட்சம்

தமிழ் பேசும் மக்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் தர்மிஷ்டம் லேபலுடன் ஆட்சியில் ஒட்டிக்கொண்டிருக்கும் இவ்வரசாங்கம் பல வித இன்னல்களை செய்து வருகின்றது என்பதை ஒரு நிகழ்ச்சி மூலம் தெளிவு படுத்த விரும்புகின்றேன்:

கடந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியின் போது அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்வித்திட்டத்தின் படி 1975 இலும் 1976 இலும் நடைபெற்றN C.G.E (தே, க, பொ. த.) பரீட்சையும் ஒரே தரமானவை என தற்போதைய தர்மிஷ்ட்ட அரசாங்கம் பத்திரிகைகள் மூலமும், அரச வர்த்தமானி மூலமும் பிரகடனப்படுத்தி விளம்பரப் படுத்தி இருக்கின்றது.

தற்போது 1976ம் ஆண்டு G.C.E. இல் தோற்றி சித்தி எய்தியோருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் ஒரே தரமாக்கப்பட்ட NCGE திறமைச் சித்திகளோடு ஆயிரக் கணக்கானோர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர், முறைப்படி ஆசிரிய நியமனம் 1975 இல் N.C.G.E.யில் தோற்றியோர்களுக்குவழங்கப்பட்ட பின்னரே 1976 GCE இல் சித்தியடைந்தோருக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்தஅநியாயத்தை வெறி பிடித்த ஸ்ரீலங்கா அரசின் கைப்பொம்மைகளான பத்திரிகைக்கு எழுதியும் அவை பிரசுரிக்கப்படவில்லை. பிரதம மந்திரி, அமைச்சர்கள் போன்றவர்களுக்கு எடுத்துக் கூறியும் இதுவரை எவ்வித பதிலுமில்லை ஏன் இந்த மௌனம்?ஏன் இந்த இருட்டடிப்பு? ஏன் இந்தக் கொடுமை? அடிக்கடிமாறும் அரசியல் கட்சிகளின் கொள்கையற்ற ஆட்டங்களால் அப்பாவி மாணவர்களாகிய நாங்கள் பாதிக்கப்படுவதா? இதை இன்றைய ஆட்சியாளர்கள் கவனத்திற்கு எடுத்து நடவடிக்கைகளை உரியவாறு மேற்கொண்டு எங்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் எனக் கோருகிறோம்.

ஏ. கே. உதுமான்,
மார்க்கட்,
மீராவோடை,
வாழைச்சேனை.




மினி பார் சோப்

மில்க்வைற் பார் சோப் பலரின் அபிமானத்தைக் கவர்ந்துள்ளது; சிலர் அதைச் சிறிய அளவில் வாங்குவதில் வாங்குவதற்கு விரும்புகிறபடியால், நாங்கள் அதனைச் சிறிய அளவில் "மினி பார் சோப்" எனத்தயாரித்து விநியோகிக்கின்றோம். அது மற்றதைப் போன்ற தரமுள்ளதாகும்

மில்க்வைற் — யாழ்ப்பாணம்

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது



## வவுனியா தமிழ்ப்பிரிவு எரிபொருள் விற்பனை நிலையம்;

# ப. நோ. கூ. சங்கத்திடமிருந்து பறிக்கப்பட்டு ஐ. தே. க. அமைப்பாளரிடம் ஒப்படைப்பு!

ஆறு ஆண்டு காலமாக வவுனியா தமிழ்ப் பிரிவு பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் பொறுப்பில் எதுவித குறைகளுக்குமிடமின்றி சிறப்புடன் நிர்வகிக்கப் பட்டு வந்த எரிபொருள் விற்பனை நிலையத்தை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மேற்படி சங்கத்திடமிருந்து பறித்து, வவுனியா ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் திரு.புலேந்திரனிடம் ஒப்படைத்துள்ளது.

பொது மக்களின் ஸ்தாபனமாகிய பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் பொறுப்பில் இருந்து வந்த மேற்படி எரிபொருள் விற்பனை நிலையம், தற்போது தனிமனிதரான திரு.புலேந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இச்செயல், ஐ.தே.க. அரசாங்கத்தின் தார்மீகப் போலித்திரையைக் கிழித்தெறிந்து விட்டது.

பொது மக்களின் நலனை விட, தனதுகட்சிக்கு வால் பிடிக்கும் தனிமனிதர்களை கைதூக்கிவிடுவதே ஐ.தே.க அரசாங்கம் பின்பற்றும் தார்மீகம் என்பது இதன் மூலம் அம்பலமாகிவிட்டது.

பொது ஸ்தாபனமாகிய ப. நோ. கூ. சங்கத்திடம் வந்த பொறுப்பைப்பறித்தெடுத்து தனிமனிதரான திரு. கே.டி.புலேந்திரனுக்கு கொடுக்கும் ஜனநாயக விரோதச் செயலை ஆட்சேபித்து, கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு.சிறில் மத்தியூவுக்கு வவுனியா பா.உ. திரு. தா. சிவசிதம்பரம் கடிதம் எழுதியிருந்தார்.

அதற்கு திரு. சிறில் மத்தியூ எழுதியுள்ள பதிலில் ப. நோ. கூ. சங்கத்திடம் இருந்துவந்த எரிபொருள் விற்பனை நிலையத்தை திரு. புலேந்திரனிடம் ஒப்படைப்பது என்று பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் மேற்கொண்ட முடிவு சரியானது என்றும், அதை மாற்ற வேண்டிய அவசியம் கிடையாது என்றும் அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசு தனது அமைப்பாளர்களைப் பணக்காரர்களாக்க, பொது நிறுவனங்களிலும் கைவைக்கத் துணிந்து விட்டது என்று பொது மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

## உதவி அரசாங்க அதிபர்களாக இராணுவ அதிகாரிகள்

### அரசாங்கம் நியமிக்க ஏற்பாடு

நாட்டில் உள்ள சில மாவட்டங்களில் உதவி அரசாங்க அதிபர்களாக இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்படவிருக்கின்றனர். இவர்கள் குறிப்பிட்ட சில நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருப்பர். இத்தகவலை ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

இராணுவ அதிகாரிகளை உதவி அரசாங்க அதிபர்களாக நியமிப்பதன் முக்கிய நோக்கம் சுற்றுடல் பாதுகாப்பேயாகும் எனக்குறிப்பிட்ட அமைச்சர். கடலில் டைனமைட் வெடிவைத்து மீன் பிடித்தல். அனுமதியின்றிக் காட்டு மரங்களைத் தறித்தல், அரசாங்கக்காணிகளில் அத்துமீறிக் குடியேறுதல்—ஆகிய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதே இந்த அதிகாரிகளின் முக்கிய பணியாக இருக்கும் என்று விளக்கினார்.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு தற்போது மாவட்டங்களைச்சேர்ந்த அரசாங்க அதிபர்களிடமே விடப்பட்டுள்ளது. ஆனால் இக் கடமைகளை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்கவிருக்கும் இராணுவ அதிகாரிகள் (புதிய உதவி அரசாங்க அதிபர்கள்) சம்பந்தப்பட்ட விஷயங்களுக்காக இராணுவப்படையினரை ஈடுபடுத்துவதா இல்லையா என்பது பற்றி ஆராயப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

தமிழ்ப் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் மாவட்டங்களிலேயே இராணுவ அதிகாரிகள் உதவிஅரசாங்க அதிபர்களாக நியமிக்கப்படுவார்கள் என நம்பப்படுகிறது;

### வல்வை சூட்டுச்சம்பவம்

## சந்தேக நபர்களான ராணுவத்தினரை நீதிமன்றத்தில் ஆஜர்செய்ய நீதிவான் உத்தரவு

வல்வெட்டித்துறையில் கடந்த சனிக்கிழமை (13-10-79) இரவு நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான சந்தேகநபர்களான மூன்று இராணுவத்தினரையும் வட பகுதிப் பாதுகாப்பு படைத் தளபதி மேஜர் பிரிகேடியர் வீரதுங்கா ஊடாக, நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பருத்தித்துறை நீதிவான் திரு. கே. ஞானச்சந்திரன் உத்தரவிட்டார்,

—வீரகேசரி (16.10.79)

## ஜெயப்பிரகாஷ் தலைக்கு விலை ரூபா 10,000

அண்மையில் அமரரான ஜெயப்பிரகாஷ் நாராயண் இந்திய விடுதலைப் போராட்டத்தில் முன்னணி வகித்தவர். 'பயங்கரவாதி' என்று வெள்ளைக்கார அரசாங்கத்தால் பட்டம் சூட்டப்பட்டவர். அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தபோது சிறை சென்றவர். சத்தியாக்கிரகத்தினால் இந்திய சுதந்திரம் கிடைக்காதுஎன்றுகருதி அதிலிருந்து விலகி, சோசலிஸ்ட் கட்சியை உருவாக்கியவர்.

அவர் இரண்டாவது முறையாக சிறையில் இருந்தபோது வெளியே சுதந்திரப்போராட்டம் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. இதில் கலந்து கொள்வதற்காக அவர் சிறைச்சாலைச் சுவரை கயிறு மூலமாகத் தாண்டித் தப்பினார், மாறு வேடத்தில் புரட்சியில் பங்கு கொண்டார். அப்போது வெள்ளையர் ஆட்சி இவரைப் பிடித்து தருபவருக்கு ரூபா 10,000 பரிசு தருவதாக விளம்பரப்படுத்தியிருந்தது,

கெயிட்டி (கொட்டாஞ்சேனை)

எம்.ஜி.ஆர், சாவித்திரி, வீரப்பா

நடித்த

மகாதேவி

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) 3-வது வாரம்

சிவாஜி, சுஜாதா, விஜயகுமார், சுந்தரராஜன், நாகேஷ், மனோரமா, சத்தியப்பிரியா, சங்கீதா

நடித்த

தீபம்

ஈஸ்மன் கலர்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.